**சுருக்கம்**

வேளாண்மை-உழவர் நலன் – தோட்டக்கலை - வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025-26 - மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் - அறிவிப்பு எண்.33 – முந்திரி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன் பாதுகாத்தல் – தமிழ்நாடு முந்திரி வாரியம் அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை**

அரசாணை (நிலை) எண்.231

நாள்:02.09.2025.
திருவள்ளுவர் ஆண்டு 2056,
விசுவாவசு வருடம்,
ஆவணித் திங்கள் 17-ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. 2025-26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள். (அறிவிப்பு எண். 33)
2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் கடித எண்.MIS/5176/2025, நாள்:12.05.2025 மற்றும் 19.06.2025.

*******

**ஆணை:**

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 15.03.2025 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட 2025 – 26 ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில் இன்ன பிறவற்றுள் பின்வரும் அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

**அறிவிப்பு எண்.33 - தமிழ்நாடு முந்திரி வாரியம்**

"முந்திரியின் பரப்பினை உயர்த்தி, உற்பத்தியை அதிகரிக்கவும், முந்திரி சார் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கவும், முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், தமிழ்நாடு முந்திரி வாரியம் (Tamil Nadu Cashew Board) ஏற்படுத்தப்படும். இதனால் முந்திரி சாகுபடி செய்யும் உழவர்களும், அதனைச் சார்ந்த தொழில் செய்யும் கிராமப்புர மக்களும் அதிகளவில் பயனடைவார்கள்."

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து கடலூரைத் தலைமையிடமாகவும், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும் கொண்டு தமிழ்நாடு முந்திரி வாரியம் மற்றும் நிர்வாகக் குழுவினை பின்வருமாறு அமைத்து அரசு ஆணையிடுகிறது.

**<u>தமிழ்நாடு முந்திரி வாரியம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் | தலைவர் |
| 2. | துணைத் தலைவர் | அரசால் நியமிக்கப்படுபவர் |

| | | |
|---|---|---|
| 3. | வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வேளாண்மை-உழவர் நலத்துறை | உறுப்பினர் செயலர் |
| **உறுப்பினர்கள்** | | |
| 4. | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் | |
| 5. | நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி, தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx) | |
| 6. | முதல்வர் (தோட்டக்கலை), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | |
| 7. | தொழில்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகத் துறை பிரதிநிதி | |
| 8. | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பிரதிநிதி | |
| 9. | வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணைய பிரதிநிதி (APEDA) | |
| 10. | கூடுதல் இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் | |
| 11. | பேராசிரியர் மற்றும் தலைவர் – மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம் | |
| 12. | தொழிளாலர் நலத்துறை பிரதிநிதி | |
| 13. | தொழில் முனைப்பு மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன பிரதிநிதி | |
| 14. | உறுப்பினர்கள் – 2 (முந்திரி பயிரிடும் மாவட்டங்களிலிருந்து 2 விவசாயிகள் அரசால் நியமிக்கப்படுவர்). | |

**தமிழ்நாடு முந்திரி வாரியத்தின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

- முந்திரி உற்பத்தி, பதப்படுத்துதல், முந்திரி தொழிலாளர்களின் நலன் காத்தல் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்க மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது தேவைக்கேற்ப வாரியத்தின் நிர்வாகக்குழுக் கூட்டம் நடத்துதல்.
- வாரியத்தின் கொள்கைகள், ஆண்டு செயல் திட்டம் (AAP) மற்றும் நிதித் தேவைகளுக்கு ஒப்புதல் வழங்குதல்.
- வருடாந்திர வரவு செலவுத் திட்டங்களை அங்கீகரித்தல் மற்றும் நிதி செயல்திறனைக் கண்காணித்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட கூட்ட முடிவுகளுக்கான தொடர் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல்.
- வாரியம் நன்முறையில் செயல்பட அறிவுரைகள் வழங்குதல்.

**நிர்வாகக் குழு**

| | | |
|---|---|---|
| 1. | வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் | தலைவர் |
| 2. | சிறப்பு செயலாளர் (நிதித்துறை) | உறுப்பினர் |
| 3. | ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை | உறுப்பினர் |
| 4. | ஆணையர், தொழிலாளர் நலத்துறை | உறுப்பினர் |
| 5. | இயக்குநர், வேளாண்மைத் துறை | உறுப்பினர் |
| 6. | இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | ஒருங்கிணைப்பாளர் (Convener) |
| 7. | துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| 8. | முன்னோடி முந்திரி விவசாயிகள் மற்றும் முந்திரி பதப்படுத்தும் தொழில் பிரதிநிதிகள் | தலா 2 உறுப்பினர்கள் |

- 2 முன்னோடி முந்திரி விவசாயிகள் மற்றும் 2 முந்திரி பதப்படுத்தும் தொழில் பிரதிநிதிகள் ஆகியோர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அரசால் நியமிக்கப்படுவர்.

**நிர்வாகக் குழுவின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

- அதிக மகசூல் தரும் புதிய இரகங்கள், பொருத்தமான இயந்திரத் தொழில்நுட்பங்கள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அறுவடை பின் சார் தொழில்நுட்பங்கள் குறித்து உரிய ஆலோசனைகள் வழங்குதல்.
- முந்திரி பயிர் தொடர்பான தொழில்நுட்பங்களுக்கு செயல்விளக்கம் அளித்தல்.
- உழவர்களின் தேவைக்கேற்ப புதிய தொழில் நுட்பங்களைப் பிரபலப்படுத்த பயிற்சிகள் வழங்குதல்.
- முந்திரி பதப்படுத்தும் நிலையம் அமைத்தல் தொடர்பான நிதியுதவி மற்றும் திட்டங்கள் குறித்து உரிய ஆலோசனை வழங்குதல்.
- முந்திரி சாகுபடித் தொழிலாளர்களை சிறு குழுக்களாக (குறைந்தபட்சம் 10 நபர்கள்) ஒருங்கிணைத்து தொழிலாளர் நலத்திட்டங்கள் மற்றும் தொழிலாளர் நல நிதி பெறுவதற்கான உரிய ஆலோசனை வழங்குதல்.
- முந்திரிக்கான சேமிப்பு வசதிகள், ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் மதிப்பு சங்கிலி (Value Chain) குறித்த ஆலோசனை வழங்குதல்.
- முந்திரி ஏற்றுமதி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு தகுந்த வாய்ப்புகளை நெறிமுறைப்படுத்துதல். முந்திரி சார்ந்த மதிப்புக் கூட்டலில் ஈடுபடும் நபர்களை ஒருங்கிணைத்து ஏற்றுமதிக்கு ஊக்குவித்தல்.
- வாரியத்தின் மூலம் செய்யப்படும் அனைத்து செலவுப் பட்டியல்கள் மற்றும் பதிவேடுகள் முறையே வருடம் வாரியாக சம்மந்தப்பட்ட அலுவலர்கள் பராமரித்து நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
- மாவட்டத்திலுள்ள முந்திரி விவசாயிகளின் நலனில் சாத்தியத் தன்மையுடன் உள்ள கோரிக்கைகளை அரசு பரிசீலித்திட வாரியக் கூட்டங்களில் முன்மொழிதல்.
- வாரியத்தின் அனைத்து செயல்பாடுகளையும் ஒருங்கிணைப்பாளருக்கு மாதாந்திர அறிக்கையாக சமர்ப்பித்தல் வேண்டும்.
- வாரியத்தில் பணியாற்ற முன்மொழிந்துள்ள பணியிடங்களுக்கான உரிய நபர்களை அரசு விதிமுறைகளின்படி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் வேண்டும்.
- அனைத்து விதமான நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்ள நிர்வாகக் குழு ஒப்புதல் அளிக்க வேண்டும்.
- வாரியத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான செலவினங்களைத் தொகுத்து நிர்வாகக் குழுவிடம் சமர்ப்பித்து ஒப்புதல் பெறுதல்.

3. மேலும், தமிழ்நாடு முந்திரி வாரியம் தொடர்பான நிதி செலவினங்கள், கோப்புகள் மற்றும் அறிக்கைகள் ஆகியவற்றை முந்திரி வாரியத்தின் தலைமையிடத்தில் ஒருங்கிணைத்திட தோட்டக்கலைத் துணை இயக்குநர் அளவில் ஓர் அலுவலரை மாற்று பணியில் நியமிக்கவும் அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. தமிழ்நாடு முந்திரி வாரியத்திற்கான துணைத் தலைவர் மற்றும் முந்திரி பயிரிடும் மாவட்டங்களிலிருந்து 2 விவசாயிகளை வாரியத்தின் உறுப்பினர்களாக நியமிப்பது தொடர்பாகவும் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களில் முன்னோடி முந்திரி விவசாயிகள் மற்றும் முந்திரி பதப்படுத்தும் தொழில் பிரதிநிதிகளில் தலா 2 உறுப்பினர்கள் நியமிப்பது தொடர்பாகவும் தனியே ஆணை வெளியிடப்படும்.

5. மேலே பத்தி 2-இல் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு முந்திரி வாரியம் செயல்படுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வாணையின் இணைப்பில் உள்ளன.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வ.தட்சிணாமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

பெறுநர்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சேப்பாக்கம், சென்னை-5.
ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை-32.
கூடுதல் தலைமைச் செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
இயக்குநர், முந்திரி மற்றும் கோகோ மேம்பாட்டு இயக்குநரகம், ஒன்றிய அரசு, கொச்சி, கேரள மாநிலம்.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு வனத் தோட்டக்கழகம், திருச்சி-620101.
நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி, தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx) கிண்டி, சென்னை–32.
துணை வேந்தர்/ பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
மண்டல இயக்குநர் மற்றும் உதவி பொது மேலாளர், வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), நுங்கம்பாக்கம், சென்னை-6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, சென்னை – 5.
பேராசிரியர் மற்றும் தலைவர் – மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மாநில விதைமேம்பாட்டு முகமை, சென்னை – 5.
முதன்மை கணக்காயர் (G&SSA/E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
கருவூல கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை- 9.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை- 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் தனிச்செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை- 9.
நிதித் (வே.உ.ந.) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு.2/வ&தி) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.10481350/தோ.க.2/2025.
இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.231, வேளாண்மை-உழவர் நலத்(தோ.க.2) துறை, நாள் 02.09.2025**

### முந்திரி வாரியம் செயல்படுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

1. தமிழ்நாடு முந்திரி வாரியம், கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, தோட்டக்கலைத் துணை இயக்குநர் (முந்திரி வாரியம்) ஒருங்கிணைப்பாளருடன் செயல்படும்.

2. முந்திரி வாரியத்தின் அலுவலகப் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பாளர், உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர் ஆகியோர் பணிப்பெயர்ச்சி அடிப்படையில் பணியமர்த்தப்படுவர்.

3. மேலும் முந்திரி வாரியம் தொடர்பான பணிகளை மேற்கொள்ள தொழில்நுட்ப அலுவலர் (Technical Officer) மற்றும் தரவு உள்ளீட்டாளர் (Data Entry Operator) ஆகியோர் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவர். இவர்களின் சம்பளம் முந்திரி வாரிய நடைமுறை செலவினமாக மேற்கொள்ளப்படும்.

**I. தொழில்நுட்ப அலுவலர் (Technical Officer) –**

- ✓ தோட்டக்கலையில் இளங்கலை/முதுகலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். மாத சம்பளமாக ரூபாய் 50,000/- வழங்கப்படும்.
- ✓ முந்திரி வாரியத்திற்குத் தேவையான தரவுகள் சேகரித்தல், பவர்பயின்ட் (Powerpoint) மென்பொருள் இயக்குதல், தோட்டக்கலை இயக்குநரகத்தில் கோரப்படும் அறிக்கைகள், தோட்டக்கலைத் துணை இயக்குநர் (முந்திரி வாரியம்) ஒப்புதலுடன் வழங்க வேண்டும்.
- ✓ முந்திரித் தோட்டங்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் வேளாண் அறிவியல் மையங்களிடம் தகுந்த ஆலோசனை பெற்று உழவர்களுக்கு வழங்க வேண்டும்.
- ✓ இதர மாவட்டங்களில் உள்ள முந்திரித் தோட்டங்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கிட நிர்வாகக் குழுத் தலைவரின் ஒப்புதலுடன், முந்திரித் தோட்டங்களைப் பார்வையிடலாம்.

**II தொழில்நுட்ப அலுவலர் – பதப்படுத்துதல் (Technical Officer – Processing)**

- ✓ தோட்டக்கலையில் இளங்கலை/முதுகலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். மாத சம்பளமாக ரூபாய் 50,000/- வழங்கப்படும்.
- ✓ முந்திரி பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி தொடர்பான தொழில்நுட்பங்களை முந்திரி விவசாயிகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.
- ✓ முந்திரி சார்ந்த நலத் திட்டங்களை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறை, TNAPEx, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

III. தரவு உள்ளீட்டாளர் (Data Entry Operator)

- ✓ பட்டப்படிப்பு முடித்தவர் நியமிக்கப்பட வேண்டும். மாத சம்பளமாக ரூ 15,000/- வழங்கப்படும்.
- ✓ MS office (Word, Excel, PPT) பயன்பாட்டில் நிபுணத்துவம் பெற்று, ஆங்கிலம் மற்றும் தமிழ் தட்டச்சு தெரிந்து இருத்தல் வேண்டும்

4. முந்திரி வாரியத்தில் மாற்றுப்பணியில் பணியமர்த்தப்படும் தோட்டக்கலைத் துணை இயக்குநர் (முந்திரி வாரியம்) மேற்கொள்ளும் அனைத்து செலவினங்களும் நிர்வாகக் குழுவின் ஒப்புதல் பெற்று மேற்கொள்ள வேண்டும்.

5. முந்திரி வாரிய செயல்பாடுகளுக்கு ரூபாய் 10,000/- வரை மாதாந்திர செலவினம் மேற்கொள்ள தோட்டக்கலைத் துணை இயக்குநருக்கு (முந்திரி வாரியம்) உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்படுகிறது. இதனை முன்பணமாக பெற்றிடவும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. ரூபாய் 10,001/- முதல் 1,00,000/- வரையிலான செலவினங்களை (விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி, செயல் விளக்க பயிற்சிகள் போன்றவை) மேற்கொள்ள தோட்டக்கலை இயக்குநர் அவர்களின் அனுமதி பெற வேண்டும். மேலும் அதற்கான பட்டியல்கள் பயிற்சிகள் முடிந்து 15 நாட்களுக்குள் தோட்டக்கலை இயக்குநருக்கு, தோட்டக்கலைத் துணை இயக்குநர் (முந்திரி வாரியம்) அவர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. ரூபாய் 1,00,000/-க்கு மேலான செலவினங்கள் அனைத்தும் நிர்வாகக் குழுவின் அனுமதி பெற்று மேற்கொள்ள வேண்டும்.

8. தேவைக்கேற்ப நிர்வாகக் குழுவின் ஒப்புதல் பெற்று, முந்திரி வாரியம் தொடர்பான நெறிமுறைகளில் மாற்றம் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்படுகிறது.

வ.தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

2/9/25
பிரிவு அலுவலர்

2/9/25